THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 27 மாசி 16 ஜ. ஆகி 6 இதழ் 17
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-2-1985

பந்தோபஸ்து அமைச்சர் தகவல்

## மீன் பிடிக்க இருந்துவரும் தடை அடுத்தமாதம் தளர்த்தப்படும்!

(கொழும்பு)

வடபகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு அடுத்த மாதத்தில் தளர்த்தப்படும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் இந்த தடை உத்தரவுகொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரா)

## நேற்றும் 431 அகதிகள் தமிழகம் சென்றனர்!

(சென்னை)

நேற்று 431 இலங்கைத்தமிழர்கள் படகுகளில் தமிழகம் வந்து சேர்ந்ததாக கூறப்பட்டது. கடந்த 4ம் திகதி முதல் இதுவரை சுமார் 10 ஆயிரம் இலங்கை அகதிகள் தமிழ் நாடு வந்துள்ளனர்.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து

# ராமநாதபுரத்தில் கதவடைப்பு ஊர்வலம் ஆர்ப்பாட்டம்

### ரஜீவ்காந்தி வியாழனன்று தமிழ்நாடு வருகிறார்

(சென்னை)

இலங்கைத்தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று ராமநாதபுரத்தில் கண்டன ஊர்வலங்களும் கடை அடைப்புகளும் நடைபெற்றுள்ளன.

இதேசமயம் இந்தியப்பிரதம மந்திரி திரு ரஜீவ்காந்தி வியாழனன்று தமிழ்நாட்டுககு விஜயம் செய்யும்போது இலங்கைத்தமிழர் பிரச்னைபற்றி தமிழ்நாடு அரசியல் தலைவர்களுடன் ஆராயப்படவிருப்பதாக அறியப்படுகின்றது.

இலங்கை தமிழ்மக்கள் கொல்லப்படுவதையும், இலங்கை கடற்படையினரால் இந்தியமீனவர்கள் சுடப்படுவதையும் எதிர்த்து ராமநாதபுரத்தில் நேற்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தியேட்டர்கள், கடைகள், ஓட்டல்கள் யாவும் மூடப்பட்டதுடன், வர்த்தக சங்கத்தலைவர் திரு எம் கணேஸ் தலைமையில் கண்டன ஊர்வலமும் நடத்தப்பட்டது.

இலங்கை தமிழ்மக்கள் பிரச்னையில்மத்திய அரசு உடனடியாகதலையிட வேண்டும் என்ற மகஜர் ஒன்றும் இராமநாதபுரம் உதவி கலெக்டரிடம் (6-ம் பக்கம 3-ம் கலம் பார்க்க)

### இந்திய காவல்படைத் தலைவர் தமிழ்நாடு விஜயம்

(சென்னை)

இந்தியக் கடலோரக்காவல் படையின் தலைமை இயக்குநர் அட்மிரல் குரானு மண்டபம் ராமேஸ்வரம்பகுதிகளை நேற்று விமானமூலம்பார்வையிட்டார்

இவர் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. (6ம்- பக்கம் 3-ம் கலம்பார்க்க)

பூஸா முகாமிலிருந்து

## வெள்ளியன்று மேலும் 50 இளைஞர் விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

பூஸாமுகாமிலிருந்துமேலும் 50 இளைஞர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விடுதலைசெய்யப்படவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

மார்ச் முதலாம் திகதி கொழும்பிலிருந்து புறப்படும் 50 இளைஞர்களும் ரயில்மூலம் வவனியா வந்து சனிக்கிழமை யாழ்ப்பாணம் சேருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

## குருநகர் வங்கிகள் எதிலும் நேற்றும் வேலை நடக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

குருநகர் வங்கிகள் எதிலும் நேற்று வேலைகள் நடைபெறவில்லை.

குருநகர் வங்கிக்கு கொண்டுவரப்பட்ட 14 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வங்கிகளில் வேலைகள் நடைபெறவில்லை.

பதற்றநிலை காரணமாக, வாடிக்கையாளர்கள் அங்கு செல்வதற்கு அஞ்சுவதாகக் கூறப்படுகிறது. கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கைதான பாதுகாப்பு ஊழியரும், வான் சாரதியும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்

இதுவரை கொள்ளையடிக்கப்பட்ட பணமோ, வாகனமோ கைப்பற்றப்படவில்லை. (6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## க.பொ.த.(சாதாரண) பரீட்சை இன்று மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுதராதர (சாதாரண) பரீட்சை இன்று வடபகுதியில் ஆரம்பமாகிறது.

கடந்த டிசம்பர் மாதம் இப்பரீட்சை நடைபெற்றபோது வடபகுதியில் மட்டும் சில நிலையங்களில் குழப்பப்பட்டது. தெரிந்ததே.

மீண்டும் இப்பரீட்சை நடாத்தப்படவேண்டுமென்று மாணவர்களும், பொதுஸ்தாப (6-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

### ஆணையாளர் விசாரிக்கப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானமும், யாழ். மாநகரசபையின் வாகனங்களுக்குப் (6ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

### தமிழ்நாடு சட்டசபை: சபாநாயகர் தெரிவு

(சென்னை)

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் பதவிக்கு அ. தி. மு. க. வைச் சேர்ந்த திரு. பாண்டியனும், துணைசபாநாயகர் பதவிக்குஇக்கட்சியைச்சேர்ந்த திரு. பால சுப்பிரமணியமும் (6ம் பக்கம் ம் 1கலம் பார்க்க)

### சத்வால் கனடாவுக்கு மாற்றம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. சத்வால் கனடாவுக்கு மாற்றலாகிச்செல்கிறார். அவரிடத்திற்கு ஆப்கானிஸ்தானில் இப்போது இந்தியத்தூதுவராகவிருக்கும் திரு. தீட்சித் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பரீட்சை முறையாக நடக்க ஒத்துழைப்பு நல்குக!

### மகாசிவம் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகும் க. பொ த. (சாதாரண) தேர்வினைக்குழப்பாது. நல்லமுறையில் நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கோரியிருக்கிறார்.

1984 டிசம்பரில் நடைபெற்ற மேற்படி தேர்வு பல்வேறு காரணிகளால் மாணவர்கள் முழுமையாக எழுத இயலாமற்போயிற்று. வட. (6-ம் பக்கம் 2-ம் கலம் பார்க்க)

### பௌசர்கள் கடத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்று பிற்பகல் இனந்தெரியாதவர்களால் பௌசர்கள் இரண்டு கடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பஸ் நிலையத்தில் பௌசர் ஒன்று எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்தபோது இக்கடத்தில் நடந்ததாகக் கூறப்படுகிறது.

## தந்திக் கம்பங்களில் இரு சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணிச் சந்தியில் எதிரெதிரேயுள்ள தந்திக்கம்பங்களில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இறந்தநிலையில் இருநபர்களின் சடலங்கள் நேற்றுக்காலை கட்டிவைக்கப்பட்டிருந்தன.

இரு சடலங்களுக்கும் அருகில் பின்வரும் வாசகங்களைக் கொண்ட அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

''இயக்கத்தின் பெயரைச் சொல்லி கொள்ளை-வழிப்பறி போன்ற சமூகவிரோத செயல் (6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## உத்தரவை மீறி வாகனத்தை ஓட்டிச் சென்றனராம்

### 4 பேர் சுடப்பட்டு மரணம்

(கொழும்பு)

இராணுவத்தினரால் வடபகுதியில நேற்று முன்தினமிரவு நான்கு தீவிரவாத சந்தேக நபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு தெரிவித்துள்ளது. (6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக் குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை ..ர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு. கொக்குவில். 1909

மோட்டார் சைக்கில்கள் வாங்க விற்க லிப்ருஸ் லிமிட்டெட் R. G. பில்டிங் 70 ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம். (2011)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் ஒன்றரைப் பரப்புக்காணியும் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் விற்பனைக்குண்டு, விபரங்கட்கு இ. சங்கர், 428 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, 23853. (2019)

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் அருகாமையில் பனங்காணி மலிந்த விலையில் விற்பனைக்கு உண்டு. பரப்பு ஒன்று ரூபா 50,000/-. தொடர்பு: த. சிவபாலன், இருபாலை வீதி, கோண்டாவில். 1958

மாவடிச் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடு கட்டக் கூடிய 4 நிலத்துண்டு விற்பனைக்குண்டு. திருமதி ம. இராமநாதன், மே/பா அமரர் வே. நாகலிங்கம் சட்டத்தரணி J. P. U. M., வட்டுக்கோட்டை. 2029

சிசில் (DELUXE) குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும் விபரங்களுக்கு 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 2028

மட்டுவில் வடக்கு சாவகச்சேரி, முத்துமாரி அம்மன் கோவில் ஒழுங்கையில் கல்வீட்டுடன் 19 பரப்பு காணி விற்பனைக்குஉண்டு. அத்துடன் முதலியாவெளியில் 9½ பரப்பு நெற்காணியும் விற்பனைக்கு உண்டு. தகுந்த விலைக்கு வாங்க விரும்புவோர் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 2033, C/o ஈழநாடு 2033

அராலிகிழக்கு கருப்பிட்டி பிள்ளையார்கோவில் பாடசாலை வீதியில் வீடுகட்டக்கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:: செ. திருநாவுக்கரசு அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் வட்டுமேற்கு வட்டுக்கோட்டை. 2035

## தேவை

டற்சன் 120Y அல்லதுபோட் செவ்றி நல்ல நிலையிலுள்ள கார் தேவை. லிப்ருஸ் லிமிட்டெட், 70, ஸ்ரான்லி வீதி, (R. G. பில்டிங்), யாழ்ப்பாணம். 2012

இந்துவேளாள சிறப்பு பட்டத்தாரி ஆசிரியைக்கு (வயது 33) அதே தொழில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பெண்ணுக்கு லக்கினத்தில் செவ்வாய் உண்டு. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 2020 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2020

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் இந்து வேளாளர் குலத்தை சேர்ந்தவரும் சுயதொழில் வருமானமுடைய 33 வயது நிரம்பிய அழகு மணமகனுக்கு இதே குலமும் 28 வயதுக்கு உட்பட்ட அழகிய மணமகளை பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள் மேலதிக விபரங்களுக்கு மணமகளின் புகைப்படத்துடனும் ஜாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 2021 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2021

## தவறிவிட்டது

நீலநிற பாக் பின்வரும் பொருட்களுடன் பருத்தித்துறை வானில்-நல்லூரடியில் தவறிவிட்டது. ஓயவூதிய அட்டை, பேனு 2, மருந்து வகைகள் சில. திருமதி கே. நாகரத்தினம், 47/5, யமுனு வீதி, செம்மணி வீதி, யாழ்ப்பாணம். 2032

## FOR SALE

Office Furniture - Executive Tables, Typist Tables, Chairs, Racks and Ceillng Fans on week days between 9-0) a m. - 1-30 p. m. No: 11/J First Floor, Momsac Buildiny Stanley Road, Jaffna. 1936

## வாடகைக்கு

நவீன வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு. நாவலர் வீதி முத்துத்தம்பி ஒழுங்கையிலுள்ளது. தொடர்பு: ஐயா. சச்சிதானந்தன் 222/4 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2027

கச்சேரி, சுண்டிக்குளி, சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அண்மையில் வீட்டின் ஒரு பகுதி சகல வசதிகளுடன் (தொலைபேசி வசதி) வாடகைக்குண்டு. முற்பணம், தேவைப்படும். தொடர்பு, 254, கண்டி வீதி யாழ்ப்பாணம். 2015

## காணவில்லை

யாழ்ப்பாணம் வைமன்வீதி, 12l7 இலக்கத்தைச் சேர்ந்த வயோதிபரான சுப்பையா செல்லத்துரை கடந்த ஞாயிறு காலை வீட்டிலிருந்து காணமல் போய்விட்டார். பொதுநிறமும் சுமாரான உயரமும் பருமனுமுடைய இவர் மாருட்டமுடையவர். அதிகம் பேசமாட்டார். நான்குமுழவெள்ளை வேட்டி மட்டும் உடுத்திருந்தார் இவரைக் காண்பவர்கள் சிரமம் பாராமல் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்தால் அல்லது தகவல் தந்தால் நன்றியாயிருப்போம். செலவுகள் ஏற்கப்படும், சன்மானம் வழங்கப்படும். அன்புடன் திருமதி தங்கபமா இரத்தினம். 2008

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரைவுள்ளது]

## கிறே நைலக்ஸ் கேள்வி மூலம் விற்பனை

**பாவு 140**

**ஊடை 72" அகலம்46"**

மேற்குறிப்பிட்ட அளவினை உடைய கிறே நைலக்ஸ் விற்பனைக்குண்டு விரும்புவோர் மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் ரூபா 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கும் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15-3-85. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், சங்கானை ப நோ.கூ.சங்கம் சங்கானை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை.

25-2-85 2026

சுன்னுகம்
பல நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னுகம்

## கூறுவிலை கோரல்

பின்வரும் பொருட்களுக்கு உற்பத்தியாளரிடமிருந்து கூறுவிலைகள் மேற்படி சங்கத்தால் கோரப்படுகின்றன. கூறுவிலைகளை 5-3-85க்கு முன்பு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

[1] நல்லெண்ணெய்
போத்தலுடன்
[2] பப்படம் 1கிலோ கிறும்
பப்படம் ½கிலோ கிறும்
[3] சூடம்
பெரிய பக்கெற்
8 கட்டியுள்ள 16 பக்கெற் கொண்ட ஒரு பெட்டி
சிறிய பக்கெற்
8 கட்டியுள்ள 16 பக்கெற் கொண்ட ஒரு பெட்டி
[4] தேயிலை - சொரி
பனிங்ஸ் தூள்
1 கிலோ கிறும் விலை
பனிங்ஸ்
1 கிலோ கிறும் விலை

பொது முகாமையாளர்
சுன்னுகம்
பல நோ. கூ. சங்கம்,
சுன்னுகம், 23-02-85 [2007]


1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689



...சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்
NO. 82, KANNATHIDDY ROAD,
JAFFNA.



EURO LANKA TRAVELS AND TOURS LTD

உலகின் எல்லாப் பாகங்களும் பேர்லின்[BERLIN]உட்பட மற்றெல்லா ஸ்தாபனங்களையும்விட மிகக்குறைந்த விலையில் விமான டிக்கட்டுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

AIR LANKA சேவை வியன்னு வழியாக
AEROFLOT சேவை (மொஸ்கோ) வழியாக ஒவ்வொரு திங்கட்கிழமைக்கும் ஆசனப் பதிவுகள் செய்து கொடுக்கப்படும்.

எமது சேவையின் விபரங்கள்;


(1) பிரயாணக் காசோலைகள் (Traveller's Cheque) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.
(2) விமான ஆசனப் பதிவுகள் (Confirmation) மற்றும் சகல பிரயாண தேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
(3) கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் செல்வதற்கான போக்குவரத்துச் சேவை.

குறிப்பு: கமிஷன் அடிப்படையில் வேலை செய்யக் கூடிய கன்வஸர்கள் வரவேற்கப்படு ன்றனர்.
மேலும் விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

EURO LANKA TRAVELS LTD
40, 3rd Cross st., Jaffna.

தலைமை அலுவலகம்:-
EURO LANKA TRAVELS LTD
6A, Daisy Villa Avenue Colombo-4.
தொலைபேசி: 585990, 589992 [2024]


## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



திரு. R. R.
சந்திரபால
பிரபல மெக்கானிக்
லடன் கருச்
உரிமையாளர்
ஊர்காவற்றுறை

தோற்றம்:
23-8-1932

மறைவு:
27-2-1984

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓர் ஆண்டு ஆனபோதிலும் உங்கள் பிரிவால் - ஏங்கும்
உங்கள்
பெற்றோர், மனைவி, மக்கள், மருமக்கள்
சம்பந்திமார், நண்பர்கள், உறவினர்கள்.

லடன் கருச்,
பண்ணை வீதி, ஊர்காவற்றுறை. 2034

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தம்பு
சின்னத்துரை
[ஓய்வுபெற்ற அரசாங்க மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்]

தோற்றம்:
17-3-1916

மறைவு:
28-1-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே எங்களையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

'கற்பகம்',
பாடசாலை லேன், ஆனைக்கோட்டை. [2037]

### மணிவாக்கு

விஞ்ஞானம் என்பது என்ன? இறைவனைச் சிறப்பானமுறையில் அறிவதுதான். விறகில் நெருப்பு இருக்கிறது. இதை அறிவது ஞானம். விறகிலுள்ள அந்த நெருப்பைப் பயன்படுத்திச் சோறு சமைத்து உண்டு அதனுல் வலிமை பெறுவது விஞ்ஞானம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நமதுநோக்கு

# அன்ருட வாழ்வில் அமைதி அவசியம்

இன்று ஆரம்பமாகும் க. பொ. த. (சா/த) பரீட்சைகளை குழப்பமின்றி நடத்தி முடிப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோரி நிற்கிருர் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை. நிறைவேற்றவேண்டிய கடமை இது.

இப்பரீட்சை இப்பகுதி மாணவர்களுக்கு மிகமுக்கியமானது; முன்பு குழப்பப்பட்டது; இன்று குழப்பமின்றி நடைபெறுவதற்கு எடுக்கப்பட்ட பிரயத்தனத்தை அறியாதவர் எவருமுண்டா?

பரீட்சைத் திணைக்களத்தின் பொறுப்பை நிறைவேற்ற எம்மிற் பலருக்கு மனமில்லாமலிருக்கலாம்; அவ்வளவு தூரம் அரசியல் பகைமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

மக்களுக்கு அவசியமான கடமைகள் பல எந்தக் குழப்பச் சூழ்நிலையிலும் நடந்தேற வேண்டியிருக்கின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் பகைமை மனப்பான்மை உள்ளிட்டால் அதனுல் நட்டமடைபவர்கள் நாமே என்பதை மறக்கலாகாது.

போராட்டம் என்ற சூழ்நிலையிலும் அன்ருட வாழ்க்கை நடைபெற முடியாத நிலை ஏற்பட்டால், அதற்கு நாமே காரணமென்ருல் அது நம்மை நாமே கெடுக்கும் செயல்; ஒருவித தற்கொலை.

தமிழ் மக்கள் பிரச்னைக்குத் தக்க தீர்வுகாண்பதற்குத் தங்கமான தருணங்கள் தோன்றின; நாட்டின் சாபக்கேடு அவை பறந்தோடிவிட்டன. பதருமல் புலம்பாமல் தோல்விகளைக் கண்டு அஞ்சாமல் தன்னம்பிகையுடன் சாவின் மத்தியில் வாழப்பழகுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

அரசியல் தீர்வு என்ற கருத்து, ஒருவித பாசாங்காகிவருவதையும், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பிரமுகர்கள் ஆட்சியைத் திசை திருப்பித் தீவிரமான நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட முன்வருவதும், சமாதான முடிவு எட்டத்தில் என்பதைக் காட்டுகிறது.

உலகெங்கிலும் பிரசித்தமான இந்நாட்டுத் தமிழரின் 'அபாயநிலைக்குத் தீர்வு காண இந்தியா உதவ வேண்டுமென்பதை யார் ஆட்சேபிக்கமுடியும்? பல நாடுகளின் புத்திமதிக்கு மாருக ராணுவத்தீர்வை நாடிநிற்கும் ஆட்சிக்கு விடை ஏது?

விடுதலைப்போராட்டம் என்ற போக்கில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் தமிழ் இளைஞர்களைத் தோற்கடிக்க முடியாதுநிலைமையை மோசமாக்கி இப்பகுதி அப்பாவி மக்களைக் கொல்வதே போர் என்று கருதப்பட்டால் அதன் முடிவென்ன போராளிகள் போராளிகளைப் போரில் கொல்லட்டும், போரை நிறுத்தும் வழி இன்றேல் வேறென்ன செய்யமுடியும்? ஏழைமக்களைக் கொன்றுகுவித்துப் போரை வெல்லலாமென்று நினைக்கும் ஆட்சி எந்த வகையிலும் வெற்றியடையமாட்டாதென்பது நிச்சயம்.

இந்தக் கொடிய சூழ்நிலையிலும் நாம் நேராக வாழக் கடமைப்பட்டுள்ளோம். ஒழுங்கைப் பேணுது போனுல் அழிவே அதன் விளைவு இன்று யாழ். நகரின் சீரழிந்த நிலை மாவட்டத்தின் வீழ்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகிறது.

மறுபடியும் மோட்டார் வாகனங்கள் வான்கள் சைக்கிள் மட்டுக்கடங்காத அளவில் வேகமாக ஓடத் தொடங்கிவிட்டன. யாழ். நகர் வீதிகளில் ஏற்படக்கூடிய வீதி விபத்துக்கள் இன்றைய தினசரி அகால மரணத்தொகையை பன்மடங்கு பெருக்கிவிடும்.

வீதிகளில் தேங்கிக்கிடக்கும் குப்பை மலைகள் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைகள். மாநகர சபை வாகனங்கள் இவற்றிற்கு ஈடுகொடுக்குமா; தீயணைக்கும் படைக்கும் இதற்கும் தொடர்புண்டா? சுயகட்டுப்பாடுணர்வுடன் இவற்றைநாம் திருத்தவும் தீர்க்கவும் முன்வரவேண்டும்.

நகரிலோ நாட்டுப்புறத்திலோ வாழ்வுக்குரிய வசதிகள் கெட்டு, குறைகள் நிரம்பிவழிகின்றன. மக்களின் விழிப்புணர்வுக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஒரு பெருஞ் சோதனைக்காலம் இது.

அதிகாரிகளைக் குறைகூறுவது மிக இலகுவானது; அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதும், கடமைதவறியவருக்குச் சவாலாக மக்கள் குழு அமைப்பதும் சிரமதான முறையில் தங்கள் தினசரிவாழ்வுக்குரியதேவைகளைப் பூர்த்தி செய்வதும், இன்றைய இக்கட்டான கட்டத்தில் எமது அவசர பணிகள். மக்கள் அன்ருட வாழ்க்கை தளம்பாது நடைபெற நாமனைவரும் உறுதி பூண்டால் எங்கள்போராட்டம் நிச்சயம் வெற்றியில் முடியும்.

உலகின் கவனம் இன்று இலங்கையைச் சார்ந்திருக்கிறது. நாம் ஒரு சிறுபான்மைச் சமூகம் என்ற மயக்கத்தில் அரசினரும் தென்னிலங்கை மக்களும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்கின்றனர்.

இது தவறென்பதை உணர்த்த நாம் ஒரு போருக்கு ஆயத்தமாகவில்லை. போராளிகளின் திட்டத்துக்கு பொதுமக்கள் பொறுப்பில்லை; போருக்குப் போர் தொடுக்க கொடுக்கிழுத்துக் கட்டும் எப்பகுதியினரும் அது ஈற்றில் அழிவென்பதை உணரவேண்டும்.

எனவே இன்றைய ஆபத்தான நிலையில் நாமே எமக்குத் தீங்கு விளைக்கும் செயல் எதிலும் சிக்கிக் கொள்ளாமல் நாளாந்த வாழ்வில் அமைதி நிலவ முயல்வோமாக.

### தமிழ் ஆசிரியர் இடமாற்றம் பற்றி இலங்கை ஆசிரியர் காங்கிரஸ்[redacted]

# நியாயமான சிபார்சுகளை ஆணைக்குழு ஏற்கிறது!

(கொழும்பு)

அண்மையில் நடந்த தமிழ் ஆசிரியர் இடமாற்றம் கல்விச் சேவை ஆணைக் குழுவினுல், அகில இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் நியாயமான சிபார்சில் நடந்தது. கடந்தகாலங்களைப் போலல்லாது கல்விச் சேவை ஆணைக்குழு புதிய அங்கத்தவர் சட்டத்தரணி ஜெயக்குமார் சுறுசுறுப்பாக இயங்கி, ஆசிரியர்களுக்கு இருந்து வரும் நெருக்கடிகளையும் பிரச்னைகளையும் உணர்ந்து எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிருர். இதே நேரத்தில், இடமாற்றங்களைத்தாமே செய்வதாகக்கூறி அதற்கு ரொக்கத்தை ஒரு கும்பல் பெற்று வருவதாகப் ஆசிரியர்களிடமிருந்து எமக்குப் புகார்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் மீது ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்''

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. கே. சிவஞானம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விச் சேவை ஆணைக்குழு அங்கத்தவர் திரு. ஜெயக்குமார் எமது சிபார்சுக்குச் செவிசாய்த்து எமது பட்டியலை ஏற்றுக்கொண்டு, இடமாற்றங்களை வழங்கினுர். இந்தப் பட்டியலைத் தாம் தான் தயாரித்ததென்று ஒரு 'கும்பல்' சொந்தம் கொண்டாடுகிறது. இவர்களை இனம் கண்டு, ஆசிரியர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

நாம் தயாரித்துக் கொடுத்த 28 பேர் கொண்ட பட்டியல் ஒன்று சென்ற மாதம் அமுல் படுத்தப்படவிருந்தது அந்தப் பட்டியல் பத்திரிகையிலும் வெளியானது. ஆனுல் இந்த இடமாற்றம் நியாயமற்றதென கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டதால் அமுல் படுத்தத் தாமதமானது. கல்விச் சேவை ஆணைக்குழு அங்கத்தவர் ஜெயக்குமார் பிரச்னைகளை நன்கு உணர்ந்தவராதலால், அந்தப்பட்டியல் நியாயமானதே என அனுமதித்தார்.

## லக்ஷ்மிக்கு சாகித்தியமண்டல விருது!

சென்னை, பெப். 26

'லக்ஷ்மி' என்ற பிரபல தமிழக எழுத்தாளர் டாக்டர் திரிபுரசந்தரிக்கு இந்தியசாகித்திய அகடமி விருது வழங்கப்பட்டுள்ளது. ஒரு காவிரியைப் போல என்றஇவரது நூலுக்கே இந்த விருது கிடைத்துள்ளது

நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் இவருடன் சேர்ந்து 21 எழுத்தாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விருது ஒரு சான்றிதழ் பத்திரத்துடன் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் கொண்டுள்ளது. (ரா)

## வடமராட்சி தபால்சேவை சீராக்க நடவடிக்கை

(புலோலி)

வடமராட்சிப் பகுதியின் தபால் விநியோகத்தைச்சீர் செய்து தபால் தாமதத்தை நீக்க புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடமராட்சிப் பகுதியின் போக்குவரத்து வசதிகள் சீர்குலைந்துள்ளமையையடுத்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மையில் பருத்தித்துறை தபால் நிலையத்திற்குப் பரிசோதனை மேற்கொள்ள வருகை தந்திருந்த யாழ். தபால் அத்தியட்சகர் திரு. எ ஸ். அருளானந்தத்திடம் வட மராட்சிப் பகுதி போக்குவரத்து சீர்குலைவுகள் பற்றி பருத்தித்துறை தபால் அதிபர் திரு. எஸ். சிவராஜசிங்கம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்தே இப்புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

புதியதிட்டத்தின்படிவல்வெட்டித்துறைகரவெட்டிதபால்நிலையங்களின் தபால் பொதிகள் பருத்தித்துறை தபால் நிலையத்திற்கு வந்து சேரும், இத் தபால் பொதிகளுடன் பருத்தித்துறை தபால் நிலைய தபால் பொதிகளையும் பஸ் வண்டியில் ஏற்றி 'தபால்ஓடி' ஒருவர் தபால் பொதிகளுடன் பயணம் செய்து யாழ். தபால் நிலையத்தில் தபால் பொதிகளைக் கையளிப்பார்.

பின்னர் யாழ். தபால் நிலையத்தில் இருக்கும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி தபால் நிலையங்களுக்கான தபால் பொதிகளையும் கையேற்றுக் கொண்டு பருத்தித்துறைக்கு வந்து சேர்வார். பருத்தித்துறையிலிருந்து கரவெட்டி, வல்வெட்டித்துறை தபால் நிலையங்களுக்கான தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.

## தவக்கால சிந்தனை



### 8-ம் நாள்

''பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது; ஆண்டவர் வழியைஆயத்தப்படுத்துங்கள்; பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக, மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக, கோணலானவை நேராகவும் கரடுமுரடானவை சமமான வழிகளாகவும்ஆக்கப்படுக, மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர். (லூக்.3/4-5) மனந் திரும்புங்கள். பிழையான வாழ்க்கைப் பயணத்தினை மாற்றியமையுங்கள். தவருன கொள்கைகளை விட்டு விடுங்கள். திசைமாறிய பறவைகளாய், குறிக்கோளில்லாத குருடர்களாய் வாழ்ந்த வாழ்க்கை போதும். பலவீனங்களுக்கும் பழிவாங்கல்களுக்கும் முற்றுப்புள்ளி வையுங்கள். திருந்தி வாழுங்கள்! திரும்பி வாருங்கள்!

**வண. வின்சென்ற் பற்றிக் அ.ம.தி.**

### 28-ம் திகதி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு

## பென்ஷன் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 28-ம் திகதி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அன்றையதினம் வழங்கப்படமாட்டாதென்று யாழ். தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 28-ம் திகதி ஓய்வூதியம் பெறவிருந்த உரும்பராய், கொக்குவில், சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திகதி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## "ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள்: தாமதத்தை தவிர்க்கவும்"

### பரு. பிரஜைகள் குழு கோரிக்கை

[புலோலி]

"கடந்த ஆண்டு இறுதியில் ஓரிரு மாதங்கள் வடபகுதியின் நிகழ்வுகளால் ஓய்வூதிய வேலைகளில் தாமதம ஏற்பட்டது. ஆனுல் இன்று காரணமின்றி ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் தாமதித்து அனுப்பப்படுவதுடன், தாமதம் தவிர்க்க முடியாத விளைவு என்ற நிலை மாறி தாமதம் நிரந்தர நியதியாக்கப் பட்டுவிட்டது. இது அனுமதிக்க முடியாததாகும்.''

இவ்வாறு பருத்தித்துறைபிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''மாதாமாதம் 15ம் திகதிக்கு ஓய்வூதியம் கிடைக்கக்கூடியதாக ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் அனுபபப்படுவது நியதி. ஓய்வூதியக் கிளையின் அசமந்தப் போக்கினுல் இந்த நிலை இன்று உருவாகியுள்ளது. அடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன்பு ஓய்வூதிய உறுதிச் சீட்டுகள் அனுப்ப ஆவனசெய்து உதவுங்கள். அஞ்சலகங்கள் மூலம் பெற இன்னும் விரும்புபவர்களுக்கே குருநகர் வங்கி ஏற்பாடு. உள்ளூர் வங்கிகள் மூலமும், கிராமிய வங்கிகள் மூலமும் ஓய்வூதியம் பெறுபவர்கள் இதனுல் பாதிப்படையாமல் காப்பாற்றுங்கள்.''

# சீக்கிய ‘அகாலிகள்’ வன்முறைகளால்

# பஞ்சாப் பொருளாதாரம் பாதிப்பு!

## முன்னாள் முதலமைச்சர் பியன்சிங் தகவல்

## ரஜீவின் சமரசமுயற்சிகளுக்கும் வரவேற்பு

புதுடில்லி பெப். 26

‘‘சீக்கியத் தீவிரவாதிகளான ‘அகாலிகளின்’ வன்முறைகளினால் பஞ்சாப் மாநிலம் மிகமோசமான பொருளாதாரப் பாதிப்பை அடைந்துள்ளது’’ என்று இம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. பியன் சிங் தெரிவித்துள்ளார்.

இவர் நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார். திரு. பியன் சிங் மேலும் கூறியதாவது:-

பிரதமர் ரஜீவ் காந்தியின் பஞ்சாப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளையும், அம்மாநிலத்தில் இடம்பெற்று வரும்வன்முறைகளைக் கண்டிப்பதற்குமான தருணம் தற்போது ‘அகாலிகளுக்குக்கிட்டியுள்ளது.

கடந்த காலங்களில் பஞ்சாப் மாநிலத்தில் இடம் பெற்ற வன்முறைகளினால் அம்மாநிலத்தின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது’’ என்றார்.

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. ஜோதிபாசுவும் பிரதமர் ரஜீவின் பஞ்சாப் தீர்வுக்கான முயற்சிகளை வரவேற்றுள்ளார்.

தீவிரவாத ‘அகாலிகள்’ களுடன் சமரசப்பேச்சு நடத்த அவர் முன்வைத்துள்ள நிபந்தனைகளையும் திரு. ஜோதிபசு ஏற்றுக்கொண்டுள்ளார்.

பஞ்சாப் நெருக்கடிக்கான தீர்வை மத்திய அரசு ஒரு தரப்பாக அறிவிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (கி)

## இன்றைய பலன்

மாசி—மாதம்
திகதி—16, (27-2-1985)
வாரம்—புதன்
திதி—ஸப்தமி பிற்பகல் வரை
நட்சத்திரம் — கார்த்திகை பிற்பகல் வரை.

மேடம்: இன்று எவ்விடயத்திலும் நிதானம் வேண்டும் வீண்பழி கேட்க நேரும்.

இடபம்; உடல் நிலையில் சிறிது தெம்பு தென்படும் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

மிதுனம்: எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் எண்ணம் போல் எதுவும் நடைபெற மாட்டாது.

கடகம்: சகோதரர் விடயத்தில் சஞ்சலம் தோன்றும் திடீர் சந்திப்பின் மூலம் பயனுள்ள விடயங்கள் நடைபெறும்.

சிங்கம்; மாதுருவழிபொருள் வரவிற்கும் இடம் ஏற்படும் வாகனச் சொந்தக்காரர் தனி வழிப் பயணத்தை தவிர்க்கவும்.

கன்னி: பிள்ளைகளினால் பிரச்னைகள் தலையெடுக்கும் பெற்றோர் பொறுமை வேண்டும்.

துலாம்: எதிர்பாராத விபத்துக்கும் இடமுண்டு போக்குவரத்தில் நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: குடும்பத்தில் சிறு சச்சரவுக்கும்இடம்உண்டு மனத்திடம் வேண்டும்.

தனுசு: கூடஇருந்தவர்களே குழிதோண்டப் பார்ப்பர் எச்சரிக்கை வேண்டும்.

மகரம்: புண்ணிய விடயங்களால் மனம் திருப்தியடையும் பிதா வழி சுகமும் உண்டு.

கும்பம்: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

மீனம்: இன்று லாபகரமான தினம் சுப காரியங்கள் மேற்கொள்வது நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## பாகிஸ்தான் பொதுத் தேர்தல்:

# இராணுவ ஆட்சியாளர்கள் பின்னணியில் நிற்கின்றனர்!

இஸ்லாமாபாத், பெப். 26

பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் பொதுத்தேர்தலில் சில இராணுவ ஆட்சிஅமைச்சர்கள் தோல்வியைத் தழுவும் நிலையில் காணப்படுகின்றனர்.

இதுவரை மூன்று முக்கிய இராணுவ ஆட்சி அமைச்சர்களின் முடிவுகள் வெளியாகியுள்ளன. இராணுவ அமைச்சர், செய்தித்துறை, கலாச்சாரம் - விளையாட்டுத்துறை அமைச்சர்களே தோல்வியைத் தழுவியுள்ளனர்.

இவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் கூடுதல் வாக்குகளுடன் முன்னணியில் நிற்கின்றனர் என்று கூறப்பட்டது.

எதிர்க்கட்சிகள பல இத்தேர்தலைப் பகிஷ்கரித்துவருகின்றன. இதனால் சில இடங்களில் வாக்கெடுப்பு மந்தமாகவே இருந்தது. இப்பகிஷ்கரிப்புக்காரணமாக வாக்களிப்புப் பற்றிய விபரங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. (கி)

## மகாஜன மாணவர் உதவி

(ஊரெழு)

அண்மையில் முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக அகதிகளாக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படுவதற்காகதெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலுதவிப் படையினர் தங்கள் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து பெருமளவில் உடைகளையும், நிதியையும் சேகரித்தனர்.

மகாஜனக் கல்லூரியில் அதிபர் திரு. வே. கந்தையா தலைமையில் இது தொடர்பாக நடைபெற்ற வைபவமொன்றில் அதிகாரமளிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர் திரு. ஆ கனக சபாபதி சேகரிககப்பட்டஉடைகளைக் கையேற்றுக் கொண்டார்.

## தியாகராஜர் என்ஜினியரிங் கல்லூரி மூடப்பட்டது!

மதுரை, பெப். 26

மதுரை ‘தியாகராஜர்’ என்ஜினியரிங் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இக்கல்லூரியின் சுமார் 200 மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்கள் ரயில் போக்குவரத்தைத் தடைசெய்துமிருந்தனர். சுமார் இரு மணி நேரத்துக்கும் மேலாக வகுப்புக்களைப் பகிஷ்கரித்து இந்த ஆர்ப்பாட்டத்தில்அவர்கள் இறங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே இந்த பொறியியல்கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. [கி]

## அரசின் பாவனைக்கு எடுபடாது!

(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழ்த்தலைவர் அமரர் ஸி சுந்தரலிங்கத்திற்குச் சொந்தமான லிங்கம் தோட்டக்காணி அரசின் பாவனைக்கு எடுக்கப்படமாட்டாதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரையோரப்பாதுகாப்பு

# 10 ஆண்டுகளில் 4மடங்காக விஸ்தரிக்க முடிவு!

சென்னை, பெப். 26

இந்திய கடல்கரையோரப் பாதுகாப்புபடை 10 ஆண்டுகளில் மூன்றிலிருந்து நான்கு மடங்காக விஸ்தரிக்கப்படவுள்ளது:

கரையோரப் பாதுகாப்பு படையின் மிகப்பெரிய கப்பலான ‘‘விக்கிரம்’’ என்ற கப்பலின் மேல்தளத்தில் அதிகாரிகள், மாலுமிகள் மத்தியில் சென்னையில் உரையாற்றிய கரையோர பாதுகாப்புபடையின் டைரக்டர் ஜெனரல் ஜ. ஜே. எஸ் குரானு இத்தகவலை தெரிவித்தார்.

இவர் இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளுக்கு விமானம் மூலம் சென்று இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் பற்றி விரிவாக பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை இந்திய கடல் பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு இம்சிக்கப்படுவதை தடுத்து நிறுத்த இராமேஸ்வரம் கடற் பிராந்தியத்தில் இந்திய ரோந்து தீவிரபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## ஆசிரியர் மோகனதாஸ் மரணம்:

# சம்பவத்தைநேரில்பார்த்தோர் சாட்சியமளிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

‘மோகனதாஸை அரசடி வீதியில் இராணுவத்தினர் கைது செய்துகொண்டு போவதாக அவரது தம்பி பாஸ்கரன் வந்து சொன்னர். சிறிது நேரத்தில் ஆனைப்பந்தி குருநாதர் சுவாமி கோவிலுக்கு முன் ஒருவர் சுடப்பட்டதாகவும் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அறிந்தேன். ஆஸ்பத்திரியில் அவர் மோகனதாஸ் என அடையாளம் கண்டேன்’

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான கந்தர்மடத்தை சேர்ந்த நடராசா மோகனதாஸின் (வயது 24) மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது மாமன் கதிரவேலு ரவிந்திரக்குமார் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு க. கேசவன், மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவர் கிளிநொச்சியில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கதிரவேலு ரவீந்திரக்குமார் சாட்சியமளிக்கும்போது, இறந்தவரை, சுட்டதை தான் காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், இன்று புதன்கிழமைக்குமுன்னர் சாட்சியமளிக்க வருமாறு மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## ஒத்திவைக்க கோரிக்கை

[சித்தன்கேணி]

விசேட சேவை அலுவலர்களுக்கு பதவியை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பில் நடைபெற இருக்கும் பரீட்சையை ஒத்திவைக்குமாறு தமிழ்பேசும் விசேட சேவை அலுவலர் கழகத்தின் பொதுச் செயலாளர் வி. ரி. கதிர்காமநாதன் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளருக்கு அவசர தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## ‘புலிகள்’ உரிமை கோருகின்றனர்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. ஞானச்சந்திரனின் கொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவரொட்டி மூலம் உரிமை கோரியுள்ளது

அதன் சுவரொட்டியில் முல்லைத்தீவு அரச அதிபர் கே. ஞானச்சந்திரன் மீது கடும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் வாசகங்கள் காணப்பட்டன.

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில்இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

## கிளிநொச்சி காணித்திணைக்கள லொறி கடத்தப்பட்டது!

(கிளிநொச்சி)

அகதிகளுக்கு சேவையாற்றி வரும் கிளிநொச்சி காணித் திணைக்கள லொறி அகதிகளுக்கு வீடமைக்க கிடுகு ஏற்ற பளைக்குச் சென்றபோது இனம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கச்சேரியில் இருந்து சேவையாற்றும் ஒரே ஒரு வாகனம் இது எனவும், இவ்வாகனம் இல்லாததால் அகதிகள் புனர்வாழ்வுத்திட்டம் ஸ்தம்பிதநிலை அடைந்துள்ளதாகவும் லொறியைக் கொண்டு சென்றோர் திருப்பி ஒப்படைக்குமாறும் கிளிநொச்சி கச்சேரியில் இருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தட்டுப்பாடு

[சுன்னுகம்]

யாழ். கச்சேரியில் உள்ள பிறப்பு இறப்பு பத்திரங்கள் வழங்கும் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான அச்சடித்த பத்திரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அனுராதபுரத்தில் இருந்து இந்த பத்திரங்கள் வராததால் பிறப்புப் பத்திரங்கள் அடுத்த சில நாட்களில் வழங்கமுடியாத நிலைஏற்படலாம் என்று பிறப்புஇறப்பு பதிவு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# "மக்களுக்காகவே தலைவர் பதவியை வகித்தேன்!"

(மானிப்பாய்)

''மக்களுக்குச் சேவைசெய்வதற்காகவே தலைவர் பதவியை ஏற்றேன். இப்பகுதிமக்களின் பாண் கஷ்டத்தைநீக்குவதற்கு எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மாவை பேக்கரிகளுக்கு விநியோகம் செய்தேன் பொது முகாமையாளரை காரியாலயத்தில்எங்கும்தேடிய பின்னர், அவர் நீண்டநேரமாகஇல்லாததாலேயேமாவை விநியோகம் செய்தேன்இதற்கு எனக்குக்கிடைத்த பரிசு பதவி இறக்கம்''

இவ்வாறு மானிப்பாய் கோயில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவராக இருந்த சி. பொ. வ. மா. க. முதலியார் விடுத்துள்ளஅறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த 24ம் திகதி நடந்த இயக்குனர்சபைக் கூட்டத்தில் திரு. முதலியார் மீதுநம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அன்று கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, திரு முதலியார் வெளிநடப்புச் செய்தார்.

இது சம்பந்தமாக திரு. முதலியார் விடுத்துள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கிளை முகாமையாளர் இடமாற்றங்கள் குறித்து பொதுச் சபை காலத்துக்குக்காலம் சில தீர்மானங்களை எடுத்துள்ளது. அதனை நான் அனுசரித்து நடந்தேன்.

கிளை முகாமையாளரை சாதாரணமாக மாற்றும்போது அவ்வவ்கிளைக் குழுக்களின் ஆலோசனை பெறப்படவேண்டும். கிளைக்கு அறிவிக்கவேண்டும் இயக்குனர்சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசியமான மாற்றங்களை தலைவர் அங்கீகாரத்துடன் மட்டுமே செய்யவேண்டும். பொதுமுகாமையாளர் நினைத்தபடி செய்யும் மாற்றம் சட்டவிரோதமானது. ஆனால் சில இயக்குனர்சபை அங்கத்தவர்கள் ஆதரித்ததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''கே. கே. பேரின்பநாயகத்தின் காசோலை மோசடி சம்பந்தமாக கடந்த இயக்குனர் சபையே முடிவு எடுத்து இருக்கலாம். இது நீதிமன்ற விசாரணையில் இருக்கும்போது, மத்தியஸ்தர்விசாரணைக்குவிட முடியாது.

''எது எப்படியிருந்தபோதிலும் எமது சங்கம் பாதிப்படையக்கூடாது வளர்ந்து, மக்களுக்கு நல்லசேவையாற்ற வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் மருதடி விநாயகனைப் பிராத்திக்கிறேன்.


**மனோகரா மினி**

ரஜனிகாந்த் நடித்த

**தாய் வீடு**

**பூவிலங்கு**

கடைசி வாரம்



**றீகல் மினி**

தினசரி 10-15, 1-30

ரஜனிகாந்த்-பூர்ணிமா ஜெராம் நடிக்கும்

சத்தியா மூவிஸ்

**தங்க மகன்**

றீகல்

தினசரி 10-30, 2-00

AN OFFICER AND A GENTLEMAN

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்



**லிடோ** சினிமா

தினசரி 10-30, 2-00

இன்று முதல்

சிவாஜி, கே.ஆர் விஜயா, நாகேஷ் நடித்த்

**உத்தமன்**

(புதிய பிரதி)

**வெலிங்டன்**

(யாழ். நகர்)

10-15, 12-15, 2 30

சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த

**நீதிபதி**

(கலர்)


## மக்கள் கருத்து

### பரீட்சையைக் குழப்பாதீர்!

சென்றாண்டில் குழப்பம் அடைந்து, பெற்றோருக்கும், மாணவருக்கும் மனதில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சை இன்று ஆரம்பமாவது எமது எதிர்காலச் சந்ததிக்கு ஓர் பெரும் வரப்பிரசாதமாகும். இன்றைய மாணவர் நாளைய சமுதாய வளர்ச்சியின் சிற்பிகள். அவர்களைப் பரீட்சைக்குத் தோற்ற முழு ஒத்துழைப்பையும் சகலரும் அளிக்க வேண்டுமென்று பெற்றோர்களில் ஒருவன் என்ற முறையில் கோருகிறேன்.

கி. றே. அலோஷியஸ்
கிளிநொச்சி

## பொருட்கள் கொள்ளை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் யாழ் மாவட்ட அபிவிருத்திசபைஉப அலுவலகத்தில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள்கொள்ளையியப்பட்டுள்ளன

வானொன்றில் நேற்றுமுன்தினம் இங்கு வந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியொன்றே இச்சம்பவத்தில் ஈடுபட்டது.

டீசல், மண்ணெண்ணெய், வயர்கள் என்பன கொள்ளை போன பொருட்களில் அடங்குகின்றன. (கி)

# "ஹெலிகொப்டர் பறந்தது வெடிச்சத்தங்கள் கேட்டன"

## மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''புகையிலைத் தோட்டத்திற்கு நண்பகல் தண்ணீர் இறைக்க என் மகன் தெய்வேந்திரம் சென்றிருந்தார். அப்போது தோட்டப்பக்கத்தில் தொடர்ச்சியாக வெடிச்சத்தங்கள் கேட்டன. மேலே ஹெலிகொப்டர் பறந்தது கீழே கவச வண்டிகள் சென்று கொண்டிருந்தன நன்போய்ப் பார்த்தபோது அவர் நிலத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தார். பின் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானார்''

மயிலங்காடு கிருஷ்ணபிள்ளை தெய்வேந்திரத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது தந்தை காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

கிருஷ்ணபிள்ளை தமது சாட்சியத்தில் சம்பவதினம் காலை அப்பகுதியில் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதால் எல்லோரும் கடைகளைப் பூட்டி விட்டு சென்றுவிட்டதால் தானும் வீடு சென்றதாகவும் வீட்டில் மகன் இருந்ததாசவும் எம் மகனிடம் சோடாவாங்கி வரும்படி கடைக்கு அனுப்ப அவர் திரும்பிவந்து கடைகள் எல்லாம் பூடடியிருப்பதாக கூறியதாவும் சொன்னார்.

இதன்பின்னர் மகன் தோட்டத்திற்குச் சென்றபோது சம்பவம் நடந்ததாகவும் கூறினார்.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் இன்றுபுதன்கிழமைக்கு முன்னர் சாட்சியமளிக்குமாறு மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். (க)


**றெருசோ ஷிப்ஸ்**

**TERRAZZO CHIPS**

IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)

★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)

★ வெள்ளைச் சீமெந்து

★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)

★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 55/-க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12

தொலைபேசி: 34411 — 31511


## அகதிகளுக்கு உடுபுடவைகள் சேகரிப்பு

[மாவிட்டபுரம்]

வீமன்காமம் மகாவித்தியாலய மாணவ, ஆசிரியர்கள் அகதிகளுக்கு உதவும் வகையில் உடுபுடவைகள், நிதி சேகரித்துள்ளனர்

மேற்படி வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் உடுபுடவைகள், பணம் உட்படமற்றும்பொருட்களையும் சேகரித்து முல்லைத்தீவு அகதிகளுக்கு அனுப்பியுள்ளனர்.

# கொக்குளாய், நாயாறு சேதம்: ரூ. 29 லட்சம்

(கொழும்பு)

கொக்கிளாய், நாயாறு ஆகிய மீனவர் கிராமங்களில் பயங்கரவாதிகள்மேற்கொண்டதாக்குதலினால் வீடு, கள் மீன்பிடி. வள்ளங்கள், வலைகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதம் 29 லட்சத்து 82 ஆயிரத்து 630 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது கடற்றொழில் அமைச்சு இந்த மதிப்பீட்டைச் செய்துள்ளது.

இதில் கொக்கிளாய் கிராமத்திலேயே அதிக சேதம் ஏற்பட்டுள்ளது அங்கு 20லட்சத்து 21 ஆயிரத்து 995 ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது.

பலத்த காயங்களுடன்— ——

# கொழும்பு ஹோட்டல் அருகே தமிழ் இளைஞர்!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியிலுள்ள உல்லாசப்பயணிகள் ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் பலத்த காயங்களுடன் காணப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரை ஜனாதிபதிமாளிகை பாதுகாப்பு ஊழியர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். மேற்படி இளைஞர் தற்போது மேலதிக விசாரணைக்காக கொள்ளுப்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மாணிக்கம் குமார் எனப்படும் மேற்படி இளைஞர் தன்னைப் பற்றி எதுவித தகவலும் தெரிவிக்க மறுத்துவிட்டார் எனப் பொலிசார்தெரிவித்துள்ளனர்.

மட்டு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது தான் விபத்துக்குள்ளானதாக இந்த இளைஞர் தெரிவித்தாரென்று கூறப்படுகிறது.

# கண்டெடுத்த தேசிய அடையாள அட்டை

தவறி விழுந்த தேசிய அடையாள அட்டைகளை கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கவும், அவற்றை உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும். கடந்த காலத்தில் நாம் செய்து வந்த சேவையை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கண்டெடுத்து ஒப்படைக்கப்பட்ட 116 தேசிய அடையாள அட்டைகளை நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஒப்படைத்து விட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கையெழுத்திட்டு எமக்கு அனுப்பிவைத்த கடிதம் வருமாறு:

'1968-ம் ஆண்டின் 32-ம் இலக்க ஆட்பதிவுச் சட்டத்தின் 18 2)ம் பிரிவின்படி தொலைந்த தேசிய அடையாள அட்டைகளைக் கண்டு எடுப்பவர்கள் அவற்றை கொழும்பு ஆட்பதிவு ஆணையாளருக்கா, அல்லது அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ ஒப்படைத்தல் அவசியமாகும். தற்பொழுது தங்கள் வசம் இவை ஒபபடைப்பதை தங்கள் பத்திரிகை மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆகையால் இனிமேல் அப்படி ஒப்படைக்க வருபவர்களிடம் அவற்றை இக்கச்சேரியிலுள்ள ஆட்பதிவு அலுவலகத்தில் ஒப்படைக்கும் படி அறிவுறுத்தவும் தங்கள் கைவசம் இருக்கும் அட்டைகளை கூடியவிரைவில் இவ் அலுவலகத்தில் கையளிக்கவும்

– மாவட்டசெயலாளரும் அரசாங்க அதிபரும்.

## நிர்வாகிகள்

(சுண்டுக்குளி)

யாழ் நாவற்குழி மகா வித்தியாலய அபிவிருத்தி சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் திரு என். ஏ. நாகராசா தலைமையில் இடம் பெற்ற புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. என். ஏ. நாகராசா, செயலாளர் வி. வ. பரராசசிங்கம், உப செயலாளர் த. விஜயானந்தன், பொருளாளர் சு. மகேந்திரராசா ஆசிரியர்.

8 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது.


**A/L 85**
**Day Class**

(திங்கள் முதல் வெள்ளி வரை)

ஆரம்பம்:
**1–3–85**

10-30: பிரயோககணிதம்

12-00: தூயகணிதம்

(1½ மணித்தியால வகுப்பு)

ஆசிரியர்:
**Ravimohan**
JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(2031)



**LIBRAS LTD**

ஜேர்மன், பிரான்ஸ் செல்வோருக்கு குறைந்த செலவில் கூடியவிரைவில் பிரயாண டிக்கட்டுகள் மற்றும் யாழ்பபாணத்திலிருந்து கட்டுநாயக்காவரை கொழும்பில் தங்கும் வசதியுட்பட செய்துகொடுக்கப்படும்.

பாஸ்போட், பொண்ட், விசா பிரயாண காசோலைகள் என்பவற்றிற்கும் தொடர்பு.

**லிப்ரூஸ் லிமிட்டெட்,**

70, ஸ்ரான்லி வீதி,

R. G. பில்டிங், யாழ்ப்பாணம்.

2014

## இளம்பெண் மரணம்

(புலோலி)

கருச்சிதைவு ஏற்பட்டமையால் இரத்தம் நஞ்சூட்டப்பட்டு இளம்பெண் ஒருவர் மரணமானுர்

கரவெட்டி துன்னலை வடக்கைச்சேர்ந்த இளம்பெண் ஒருவரே மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ், வயிரமுத்து மரணம்சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டார்

இறந்தவரின் தாயார், மைத்துனி ஆகியோர் சாட்சியமளித்தனர்

மந்திகை அரசினர் வைத்தியசாலை டாக்டர் செல்வி விஜயலட்சுமி சதாசிவம் சாட்சியமளிக்கையில்:- ''கருச்சிதைவு ஏற்பட்டமையால் இரத்தம் நஞ்சூட்டப்பட்டு இறந்தவருக்கு மரணம் சம்பவித்துள்ளது' என்று கூறினுர்.

மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## தமிழ்நாடு...

[1-ம்பக்க2ம்கலத் தொடர்ச்சி]

வேட்புமனுத்தாக்கல்செய்துள்ளனர்.

வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கடைசிநாள்நேற்று நண்பகலுடன் முடிவடைந்தது.

இவர்கள் இருவரும் இப்பதவிகளுக்கு இன்று முறைப்படி தெரிவு செய்யப்படுவார்கள்

## உத்தரவை...

[1ம்பக்க ம் கலத்தொடர்ச்சி]

இந்த நால்வரும் வாகனம் ஒன்றில் பிரயாணம் செய்ததாகவும், அந்த வாகனத்தை நிறுத்தும்படி இராணுவத்தினர் உத்தரவிட்டும்; அந்த உத்தரவை மீறி செல்லுகையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (மாவி நிரு]

தனியார் கராஜ் ஒன்றிலிருந்தே இந்த வாகனம எடுத்து வரப்பட்டிருந்ததாகவும் இதில் மெக்கானிக்மார் இருவருடன் வேறு இருவர் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப் பட்டவர்களின் சடலங்களை பெற்றுக்கொள்வதில் மினிபஸ் சாரதிகள் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இச்சம்பவத்தையடுத்து மாவிட்டபுரம் பகுதியில் பலத்த பதட்டநிலை காணப்பட்டது.

## தந்திக்..

[1-ம்பக்க-2ம்கலத்தொடர்ச்சி]

களில் ஈடுபட்டமைக்காக வேலணையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் என்பவருக்கும் கந்தர்மடத்தைச்சேர்ந்த ரவீந்திரன் என்பவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது- தமிழீழவிடுதலைப்புலிகள் என்று அவ்வட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. (மா)

## பரீட்சை...

(1ம் பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

கிழக்கு மாகாணங்களில் மட்டுமே இவ்வாறுன நிலைமை இருந்தது

வடக்கு கிழக்கிலுள்ள அனைத்துமாணவர்க்கும் நியாயத் கிடைக்கும்வகையில் நடைபெற்ற பரீட்சையை முழுமையாக இரத்துச்செய்துவிட்டு. மீண்டும் ஒரு பரீட்சையை நடத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரையும், பரீட்சை ஆணையாளரையும் கேட்டிருந்தது.

ஆனுல் பரீட்சை முழுமையாக இரத்துச் செய்யப்படாமலே நடத்தப்படுகிறது. இருந்தபோதிலும் நடைபெற இருக்கின்ற பரீட்சை நல்லபடி நடந்துமுடிவதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் ஆகிய அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

உலகக் கிரிக்கெட்:

## இந்தியக் கோஷ்டி மீண்டும் வெற்றி!

(மெல்போன்)

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட 'உலக வெற்றிக்கிண்ணக்' கிரிக்கெட் போட்டியில் இந்தியக் குழு, இங்கிலாந்துக் குழுவைத் தோற்கடித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக்குழு '50 ஓவர்களில்' 9விக்கெட்டுகளையும் இழந்து 235 ஓட்டங்களை எடுத்தது. இந்தியக் கோஷ்டியின் துடுப்படி வீரர்களான கே ஸ்ரீகாந் 57, வெங்சாகர் 42, எம், அருஹூதீன் 43, கபில்தேவ் 4, காப்டன் சுனில் கவஸ்கர் (ஆட்டமிழக்காமல்) 30 ஓட்டங்களை எடுத்தனர்;

இங்கிலாந்துக்குழு 43 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 149 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது இக்குழு ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்தியக் கோஷ்டியின் சுழல் பந்துவிச்சு வீரர் சிவராமக்கிருஷ்ணனின் அபாரப்பந்து வீச்சே இந்தியக் கோஷ்டியின் வெற்றிக்கு வழிவகுத்தது. இவர் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுகளை வீழ்த்தினுர். சாஸ்திரியும் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினுர்.

இந்தியக் கோஷ்டி, இவ் வெற்றியின் நிமித்தம் 'ஏ' பிரிவில் மொத்தம் 4 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

### இன்றைய ஆட்டம்

இப் போட்டியில், இன்றைய ஆட்டத்தில், இலங்கைக் கோஷ்டி மே.இந்தியக் கோஷ்டியை எதிர்த்து மோதுகின்றது. (வி)


## மரண அறிவித்தல்

### க. சுப்பிரமணியம்

சண்டிலிப்பாய் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் [இளைப்பாறிய P W. D. ஓவசியர்] 26-2-85 அன்று காலமானுர். அன்னுர் காலம் சென்ற வள்ளியம்மையின் அன்புக்கணவரும் சிவகுமாரன் [கார்கில்ஸ் நுவரேலியா], டாக்டர் சிவயோகநாதன் (அரசினர் ஆஸ்பத்திரி கிளிநொச்சி), கனகரத்தினம் பத்மாவதி, செல்வராசா [கணக்காளர் நைஜீரியா] ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (27-2-85) புதன்கிழமை காலை 11 மணிக்கு சண்டிலிப்பாயில் நடைபெறும் 2039


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eeelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tle phone um · 22nber389-24126

## மேலும் ஒரு ட்ராக்டர் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான ட்ராக்டர்ஒன்று நேற்று நண்பகல் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது.

இதுவரை மாநகர சபைக்கு சொந்தமான நான்கு ட்ராக்டர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது கடத்தப்பட்ட ட்ராக்டர்கள் எதுவும் இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

மாநகரசபைக்குரிய கல் நெரிக்கும் யந்திரம் ஒன்றும், ட்ராக்டர் ஒன்றும் ஆயுதப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறடபடுகின்றது. (க)

## இலங்கைத்...

[1ம்பக்க 4ம்கலத் தொடர்ச்சி[

கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

### ரஜீவ் வருகை

பிரதமர் ரஜீவ் காந்தி நாளை இரவு சென்னை வரவுள்ளார். நாளை இரவு ராஜ்பவனில் தங்கியிருக்கும் அவர். நாளை மறுநாள் புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வார்.

## இந்திய காவல்...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

எஸ். குருமூர்த்தியுடனும் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனும் பல்வேறு விடயங்கள் குறித்துபேச்சுககள் நடத்தினுர்.

## ஆணையாளர்...

1ம் பக்க 4ம்கல தொடர்ச்சி)

பொறுப்பான உத்தியோகத்தர் திரு இ. ராஜேந்திரமும் இரகசிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை 9-30 க்கு விசாரணைக்கழைக்கப்பட்ட இருவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டபின்னர் பிற்பகல் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணை சம்பந்தமாக எதுவித விபரமும் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## குருநகர்...

[1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி]

### வங்கி ஊழியர் தீர்மானம்

இதே சமயம் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று வங்கி ஊழியர்களையும விடுதலை செய்யும் வரை யாழ் மாவட்டத்தில் உள்ள எந்த வங்கியிலும் வேலைகள் செய்வதில்லை என நேற்றுக்கூடிய வங்கி ஊழியர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்என்று தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் நடந்த இக் கூட்டத்தில் இலங்கை வங்கி மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வர்த்த வங்கி ஹட்டன் நாஷனல் வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டதாக தெரியவருகிறது. ஊழியர்கள் வங்கிகளுக்கு செல்வார்களென்றும், ஆனுல் வேலைகள் நடைபெருது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குருநகர் வங்கிகள்யாவும் நேற்று மூடப்பட்டிருந்தன. மறு அறிவித்தல்வரை வங்கியில் வேலைகள் நடைபெருது என அறிவித்தல் போடப்பட்டிருந்தது. பாதுகாப்பு உத்தியோகத்தரும், வங்கிகளில் நேற்று கடமையாற்றவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

### கிராமிய சச்சரவுகளைத் தீர்க்க

## கி. சே. பிரிவுகளில் சமாதான சபைகள்

(புலோலி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம மக்களுக்கிடையே ஏற்படும் சச்சரவுகள், பிணக்குகளைத் தீர்த்து கிராமமட்டத்திலான ஒற்றுமையைப் பலப்படுத்துமுகமாக கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் 'சமாதான சபைகள்' அமைக்கப்பட்டு வருகின்றன.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை இச்சமாதான சபைகளை அங்குரார்ப்பணம் செய்துவைத்துவருகிருர். இதுவரை புலோலி தெற்கு கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கான சமாதான சபைகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளன.

### வாகனங்கள் இல்லாமையால்—

## வீதி ஓரங்களில் குப்பை குவிகின்றதாம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை எல்லைக்குள், உள்ள வீதியோரங்களில் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன

சில தினங்களாக குப்பைகள் அகற்றும் வேலைகள் நடைபெறவில்லை. வாகனங்கள் இல்லாத காரணத்தினுல் குப்பைகள் அகற்றப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

வீதிகளில் குப்பைகள் குவிந்து கிடப்பது தொடர்பாக பொதுமக்கள் புகார் செய்துள்ளனர். (க)

## பத்திரிகாலயத்தில் நான்குபேர் விசாரிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

சட்டர்டே றிவியு காரியாலயத்திற்குச்சென்ற ஆயுதப் படையினர் நேற்று நான்கு பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்

அப்பத்திரிகையின் ஆசிரியர் திரு காமினி நவரத்தினம், மற்றும் அங்குவேலைசெய்யும் அலுவலருடன் அச்சமயத்தில் அங்கிருந்த வெளியார் இருவரும் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## மன்னுர் கிராமத்தில்

[யாழ்ப்பாணம்]

மன்னுரில் உள்ள கிராமம் ஒன்றில் அதிகமான வீடுகள் தீவைக்கப்பட்டு நாசமாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றுள் குடிசை வீடுகளே அதிகமானவை எனக் கூறப்படுகிறது.

மன்னுர்ப் பகுதியில் ஏற்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து, பீதியடைந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெறியேறி வேறிடங்களில் தஞ்சம் புகுந்திருப்பது தெரிந்ததே

வீதிகளில் சன நடமாட்டம் இல்லை. வயல்களில் பெரும் நெல் விளைச்சல் இருந்தபோதிலும் அறுவடைசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கமநல சேவைத் திணைக்களத்தின் கிளை நிலையங்களிலிருந்து கடத்திச்செல்லப்பட்ட ஏழு உழவு இயந்திரங்களையும் (ட்ராக்டர்) விவசாயிகளின் நன்மைகருதி மீண்டும் ஒப்படைக்குமாறு, கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளர் திரு கே. பரமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழ்நாட்டில் பிரி. இளவரசி

[சென்னை]

தமிழ் நாட்டில் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக வந்திருந்த இளவரசி ஆன், தமது பயணத்தைமுடித்துக்கொண்டு புதுடில்லி திரும்பினுர்.

## எம். ஜி. ஆர். பதவிப் பிரமாணம்

[சென்னை]

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டசபை உறுப்பினராக திரு எம் ஜி. ராமச்சந்திரன் தற்காலிக சபாநாயகர் திரு பா. உ. சண்முகம் முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## பாக். அமைச்சரவை கலைக்கப்பட்டது

(கராச்சி)

பாகிஸ்தான் அமைச்சரவை நேற்று அதிபர் ஸியாவுல் ஹக்கினுல் கலைக்கப்பட்டுவிட்டது. நேற்றுமுன்தினம் நடந்த பொதுத்தேர்தலில் பலஅமைச்சர்கள் தோல்வியடைந்ததால் இந்த நடவடிக்கையை அவர் எடுத்தார்.

## கிணறு நன்கொடை

(கொழும்புத்துறை)

வங்காலை தேவாலயத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தின் போது பலியான வண. பிதா. மேரி பஸ்தியான் அடிகளாரின் நினைவாகப் பலாலி தெற்கு வயாவிளான் புனிதயாகப்பர் தேவாலயத்தில் கிணறென்று நன்கொடையாக வெட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. பற்றிக் பெர்னுண்டஸ் தம்பதிகளால் இக்கிணறு வழங்கப்பட்டுள்ளது. (ப)

## தொலைபேசி பாதிப்பு

[வேலணை]

தீவுப்பகுதியில் வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த பெருமளவுத் தந்திக்கம்பிகளை நாளுக்கு நாள் திருடர்கள் கள்ளத்தனமாக வெட்டி எடுத்து விடுகின்றுர்கள் இதன் காரணமாக இப்பகுதி தொலைபேசி சேவைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன. [ப]

## க. பொ.த...

(1-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

னங்களும் வேண்டுகோள்விடுத்திருந்தன.

பரீட்சை நடைபெற ஒத்துழைப்புவழங்கவேண்டு மென்று இயக்கங்களும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டிருந்தன.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்பிரதிநிதிகள் குழுவும் பரீட்சை நடைபெற ஒத்துழைப்புவழங்கவேண்டுமென்றுகேட்டு